**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.6.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மணி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

Accused is present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இறந்துபோன மில்டன் ராஜ் என்பவரைத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு மில்டன் ராஜ் இறந்துவிட்டார். அவர் எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியாது. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 25.01.2020 அன்று இரவு சுமார் 11 மணியளவில் வெள்ளாளன்கோட்டை செபஸ்தியார் கோவில் திருவிழா பார்க்க எதிரியும், இறந்துபோன மில்டன் ராஜிம் ஒன்றாக இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், பின்னர் மில்டன் ராஜ் வீடு திரும்பாமல் இருந்ததாகவும், 31.01.2020 அன்று மதியம் சுமார் 12.45 மணியளவில் திருமங்கலகுறிச்சி அருகில் உள்ள தோட்டத்தில் மில்டன் ராஜ் உடல் அழுகியநிலையில்

இறந்துகிடப்பதாக நான் கேள்விப்பட்டு உடலை நான் போய் பார்த்ததாகவும், இதற்கு காரணம் என்னவென்றால் ஆஜர் எதிரியின் மனைவிக்கும், மேற்படி மில்டன் ராஜிக்கும் தொடர்பு இருப்பதாக எதிரி சந்தேகப்பட்டு மில்டன் ராஜை எதிரி கொலை செய்திருக்கலாம் என்று அ.சா.1 போலீசில் புகார் கொடுத்ததாகவும், நான் கேள்விப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரி எங்கள் ஊர்க்காரர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.11.18 17:34:27 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.

Prosecution witness for P.W.7.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஆண்ட்ரோஸ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

Accused is present.

முதல் விசாரணை

நான் தற்போது கயத்தாரில் குடியிருந்து ஆம்புலன்ஸ் ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். 31.01.2020 அன்று பகல் 12.15 மணியளவில் நான் சங்கரன்கோவிலிருந்து இருசக்கர வாகனத்தில் கயத்தார் நோக்கி வந்து கொண்டிருந்தபோது திருமங்கலகுறிச்சி அருகில் சாலையில் கூட்டமாக இருந்தது. என்னவென்று கேட்டபோது ஒரு பிரேதம் இருப்பதாக சொன்னார்கள். பிரேதம் விஜயகுமார் என்பவரின் கொய்யா தோட்டத்தில் இருந்தது. பிரேதம் மில்டன் ராஜ் என்பவரின் பிரேதம். பிரேதத்தை பார்த்த உடன் அ.சா.1 ன் வீட்டிற்கு சென்று அ.சா.1—ஐ மேற்படி இடத்திற்கு அழைத்து வந்தேன். பிரேதத்திலிருந்த உடையை வைத்து அ.சா.1 அடையாளம் கண்டுகொண்டார். பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. கை, கால்களில் புழு வந்திருந்தது. ஆஜர் எதிரிக்கும், மில்டன் ராஜிக்கும் பிரச்சனை இருந்ததாக கேள்விப்பட்டேன். குடும்ப பிரச்சனை இருந்தது. என்ன பிரச்சனை என்று தெரியவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் முதலில் பார்க்கும்போது இருந்த கூட்டத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் பெயர் தெரியாது. சுமார் 20 பேர் இருந்தார்கள். தார் சாலையிலிருந்து சுமார் 500 அடி துாரத்தில் பிரேதம் இருந்தது. நான் சாலையிலிருந்துதான் பிரேதத்தை பார்த்தேன். உள்ளே சென்று பார்க்கவில்லை. பிரேதம் இருப்பது குறித்து நான் போலீசாருக்கோ, ஆம்புலன்சிற்கோ தகவல் சொல்லவில்லை. அ.சா.2 மேற்படி இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் நான் கவனிக்கவில்லை. நான் அ.சா.1–ஐ அழைத்து வந்து மேற்படி இடத்தில் சுமார் 10 நிமிடங்கள் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் பொய்யானவை என்றும், இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.11.18 17:34:34 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.
Prosecution witness for P.W.8.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. விஜயகுமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

Accused is present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் முன்னாள் இராணுவ வீரர். 31.01.2020 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் கயத்தாரில் சூரிய மினிக்கன் பகுதியில் எங்கள் கொய்யா தோட்டத்திற்கு நான் சென்றிருந்தபோது அங்கு ஒரு கெட்ட வாடை வந்தது. நான் போய் பார்க்கும்போது அங்கு ஒரு ஆண் பிரேதம் என் தோட்டத்திற்குள் இருந்தது. பிரேதத்தை புழு அரித்திருந்தது. எங்கள் காவலாளியின் வீடு எங்கள் பண்ணைக்கு எதிரில் உள்ளது. அவரிடம் தகவல் சொல்லி சாலையில் செல்பவரிடம் சொல்லச்சொன்னேன். தகவல் தெரிந்து அங்கு கூட்டம் கூடிவிட்டது. அங்கிருந்த ஒருவர் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொன்னார். இறந்துபோன நபர் பெயர் மில்டன் ராஜ் என்பது பிறகு தெரியவந்தது. ஆஜர் எதிரிக்கும், இறந்துபோனவருக்கும் குடும்ப பிரச்சனை இருந்ததாக கேள்விப்பட்டேன். மே,ற்படி மில்டன் ராஜை யார் கொலை செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

கிராம நிர்வாக அலுவலர் சுமார் 12 மணியளவில் எங்கள் தோட்டத்திற்கு வந்தார். நான் பிற்பகல் 2 மணியளவில் தோட்டத்திலிருந்து கிளம்பி விட்டேன். அதனால் ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்று எனக்குத் தெரியாது. ரோந்துபோலீசார் 12.30 மணியளவில் அங்கு வந்தார்கள். ரோந்து போலீசார் சுமார் 30 நிமிடங்கள் அங்கிருந்தார்கள். ஒரு நபர் சந்தேகத்திற்கு இடமான வகையில் காயமடைந்திருந்தாலோ அல்லது இறந்து கிடந்தாலோ ஆம்புலன்சுக்கும், போலீசுக்கும் தகவல் சொல்ல வேண்டுமென்பது எனக்குத் தெரியும். நான் போலீசுக்கும், கிராம நிர்வாக அலுவலருக்கும் தகவல் சொல்லவில்லை. அங்கிருந்த கூட்டத்தில் யாரோ சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிக்கும், இறந்துபோன நபருக்கும் குடும்ப பிரச்சனை இருந்ததாக போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.11.18 17:34:41 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.

Prosecution witness for P.W.9.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. புஷ்பராணி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

Accused is present.

முதல் விசாரணை

நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன மில்டன்ராஜ் என் கணவர். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 25.01.2020 அன்று என் கணவர் வேலைக்கு சென்றவர் மாலை 6 மணியளவில் வீட்டிற்கு வந்தார். இரவு 11 மணியளவில் ஆஜர் எதிரி என் கணவரை அழைத்துச் சென்றார். வெள்ளாளர் கோட்டை செபஸ்தியார் கோவில் திருவிழாவிற்கு அழைத்துச் சென்றார். மீண்டும் என் கணவர் வரவில்லை. என் மகன் அமிசன் மூலமாக விசாரித்தேன். என் கணவர் வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு அ.சா.1 னிடம் கேட்டேன். என் கணவர் வரவில்லை என்று அ.சா.1 சொல்லிவிட்டார். அவரது கைபேசி அணைத்து வைக்கப்பட்டிருப்பதாக அ.சா.1 சொன்னார். என் கணவரை காணவில்லை என்று ஊரில் சொல்லி வைத்திருந்தோம். புளிம்பட்டி கோவில் திருவிழாவிற்கு நாங்கள் மாலை போட்டிருந்தோம். 31.01.2020 அன்று வந்துவிட்டோம். காலை 8.30 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். காலை 11.30 மணியளவில் என் கணவர் இறந்து கிடப்பதாக எங்கள் ஊர் ஆட்கள் எனக்கு கைபேசி மூலம் தகவல்

சொன்னார்கள். நான் தகவல் கிடைத்தவுடன் கயத்தாரிலிருந்து கம்மாபட்டிக்கு சென்றேன். நான் கம்மாபட்டியிலிருந்து திருமங்கலகுறிச்சி தோப்பிற்கு சென்று என் கணவரின் பிரேதத்தை பார்த்தேன். உடல் அரிக்கப்பட்டிருந்தது. பிரேத்திலிருந்த உடைகள், ஜெபமாலை ஆகியவற்றை வைத்து என் கணவரை அடையாளம் கண்டுகொண்டேன். அங்கு வேறு யார் இருந்தார்கள் என்றால் எனக்குத் தெரியவில்லை. எதிரியின் மனைவியுடன் இறந்துபோனவருக்கு தவறான தொடர்பு இருப்பதாக நினைத்து எதிரி என் கணவரை கொலை செய்திருக்கலாம். ஏற்கனவே என் கணவரை கொல்ல வேண்டுமென்று எதிரி பேசிக் கொண்டிருந்ததாக மதுபானக்கடையில் செல்லத்துரை என்பவர் பேசிக் கொண்டிருந்தார். மேற்படி காரணத்தினால்தான் எதிரி என் கணவரை கொலை செய்துவிட்டார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

எனக்கு வந்த கைபேசி அழைப்பு யாரிடமிருந்து வந்தது என்று எனக்குத் தெரியாது. ஆய்வாளர் விசாரணையில் அந்த கைபேசி எண் குறித்து நான் தகவல் தெரிவிக்கவில்லை. 31.01.2020 அன்று பிரேதம் இருந்த இடத்தில் போலீசார் என்னை விசாரித்தார்கள். மறுநாளும் என்னை விசாரித்தார்கள். பிரேதம் இருந்த இடத்தில் போலீசார் என்னை விசாரிக்கும்போது மாலை 4 மணியிருக்கும். மறுநாள் எங்கள் வீட்டில் வைத்து போலீசார் என்னை காலை 10 மணியளவில் விசாரித்தார்கள். மேற்படி தேதியில் நான் கயத்தாரில் கட்டுமான தொழிலுக்கு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொன்னேன். அ.சா.2 பிரேதம் இருந்த இடத்திற்கு பகல் 2 மணிக்கு வந்தார். எனக்கு தகவல் கிடைத்த சுமார் 2 மணி நேரத்தில் பிரேதம் இருந்த இடத்திற்கு வந்தேன். எனக்கு தகவல் கிடைத்த உடன் அது குறித்து நான் போலீசாருக்கு தகவல்

சொல்லவில்லை. நான் 2 மணிக்கு மேற்படி இடத்திற்கு போனேன். அதற்கு முன்பாக அ.சா.1 போலீசாருக்கு தகவல் சொன்னதால் நான் தகவல் சொல்லவில்லை. நான் மேற்படி இடத்திற்கு போகும்போது போலீசார் அங்கிருந்தார்கள். என் கணவரும், என் அக்காவின் கணவரும் என் அக்காவை கொலை செய்ய முயற்சித்ததாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் என் அக்காவிற்கு காயம் ஏற்பட்டு ஐந்து நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் சரிதான். என் கணவர் இறந்த காலகட்டத்தில் அவரது கைபேசி எண் எனக்குத் தெரியாது. அ.சா.1 பலமுறை தொடர்பு கொண்டும் என் கணவரின் கைபேசி அணைக்கப்பட்டிருந்ததாக அ.சா.1 என்னிடம் சொன்னார். என் கணவர் காணாமல் போனதாக சொல்லப்படும் காலகட்டத்தில் அவரது கைபேசி எண்ணை வாங்கி அவரை தொடர்பு கொள்ள நான் முயற்சிக்கவில்லை என்றால் நாங்கள் ஏற்கனவே பிரிந்திருந்ததால் அவரை தொடர்பு கொள்ள முயற்சிக்கவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த தகவலும் எனக்கு கிடைக்கவில்லை என்றும், நான் மேற்படி இடத்திற்கு போகவும் இல்லை என்றும், முதல் விசாரணை சங்கதிகளை போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்சாட்சியமாக அளித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் இறப்பதற்கு முன்பாக சுமார் 6 ஆண்டுகளாக நாங்கள் பிரிந்திருந்தோம் என்றால் சரிதான். என் கணவரின் பிரேதம் இருந்த இடத்தில் நிறைய பேர் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள் என்றால் நான் அழுது கொண்டிருந்ததால் எனக்கு தெரியவில்லை. எதிரிக்கும், என் கணவருக்கும் எந்தவித முன்விரோதமும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் இறப்பிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை

என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.11.18 17:34:49 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.